முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்
முன்னிலை: திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

2025-ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ம் நாள் செவ்வாய்கிழமை

இடைநிலை மனு எண். 2/2022

in

Testamentary Original Suit No.312/2021

பி.சிவானந்தம் ..... மனுதாரர்/ முதல் பிரதிவாதி

/எதிர்/

1. B. நிதிஷ் ஹரிஹர் ... முதல் எதிர்மனுதாரர்/ வாதி

2. B. ஜெயஸ்ரீ

3. B. லதா

4. M. பிரனுதி

5. N. சந்தானகிருஷ்ணன்

6. K.R.ராமானுஜம் (இறந்து விட்டார் ) ... 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 6 பிரதிவாதிகள்

(இந்நீதிமன்ற இ.ம.எண்.4/2024-ல் 19.02.2025 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு படி வழக்குரை திருத்தம் செய்ய அனுமதிக்கப் பட்டது)

இம்மனு 09.06.2025 தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.S.மாதேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், முதல் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.T.ராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:-

<u>உத்தரவு</u>

மனுதாரர் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11–ன் கீழ் வழக்குரையை நிராகரிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனுதாரர் அசல் வழக்கில் முதல் பிரதிவாதி ஆவார். மனுதாரரின் சகோதரிகள் 2, 3 எதிர்மனுதாரர்கள் ஆவார்கள். மனுதாரரின் சகோதரரின் மகள் 4–வது எதிர்மனுதாரர் ஆவார். 5– வது மற்றும் 6–வது எதிர்மனுதாரர்கள் உயிலை நிறைவேற்றுபவர்கள் ஆவார்கள். உயில் மெய்ப்பிதழ் செய்யக்கோரும் மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை முதல் எதிர்மனுதாரர் நிரூபிக்க வேண்டும். முதல் எதிர்மனுதாரர் 16.07.2014 தேதியிட்ட உயில் சாசனத்தையும், 11.11.2018 தேதியிட்ட உயில் இணைப்பு பத்திரத்தையும் உறுதி படுத்த (நிர்வாக கடிதம்) கோரி மனு தாக்கல் செய்துள்ளார். உயில் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் சென்னை மாவட்டத்திற்கு வெளியே அமைந்துள்ளது. 16.07.2014 தேதியிட்ட உயில் சாசனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. உயில் இணைப்பு பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. 16.07.2014 தேதிய உயிலில் ஆர்.பி.சாரதி என்பவர் கையெழுத்து போட்டுள்ளார். 14.07.2018 தேதிய உயில் இணைப்பு பத்திரத்தில் கையெழுத்துடன் இடது பெருவிரல் கைரேகை வைக்கப்பட்டுள்ளது. இந்திய வாரிசுரிமை சட்டம் 1925, பிரிவு 57 உடன் இணைந்த பிரிவு 213 –ன்படி உயில் சாசனம் மற்றும் உயில் இணைப்பிற்கு உயில் மெய்ப்பிதழ் சான்றிதழ் பெற வேண்டியது இல்லை. உயில் சாசனம் மறுக்கப்பட்டால் வாதி

விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உயிலை சட்டப்படி நிரூபிக்க வேண்டும். உயில் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து பல நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன. அ.வ.எண்.50/2012 மற்றும் அ.வ.எண்.1019/2009 ஆகிய வழக்குகள் நிலுவையில் உள்ளன. அந்த வழக்குகளில் வாதியின் தாயார் தரப்பினராக உள்ளார். ஸ்ரீ நரசூஸ் காபி கம்பெனி லிமிட்டெட் நிறுவனத்தின் அசையா சொத்துக்கள் சம்பந்தமாக அ.வ.எண்.106/2009 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மனுதாரருக்கு சாதகமாக முடிந்துள்ளது. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் சி.ஆர்.பி.நெ.2379/2012–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி உறுதி செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் எஸ்.எல்.பி.நெ.118/2015–ல் அந்த உத்தரவு உறுதி செய்யப்பட்டுள்ளது. மனு தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் இல்லை. மனுவில் வழக்குமூலம் பற்றி கற்பனையாக குறிப்பிடப்பட்டுள்ளது. உயில் சாசனம் மற்றும் உயில் இணைப்பு பத்திரம் எழுதுவதற்கு சாரதி என்பவருக்கு உரிமை இல்லை. இந்திய வாரிசுரிமை சட்டம் பிரிவு 222–ன்படி உயிலை நிறைவேற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்றுபவர்கள் தான் மனு தாக்கல் செய்ய முடியும். எனவே T.O.S.No.312/2021 வழக்கின் வழக்குரையை நிராகரிக்க வேண்டும்.

3. <u>முதல் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனு சட்டப்படியும், பொருண்மைகள்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. முதல் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். உயில் இணைப்பில் கையெழுத்து மற்றும் கைரேகை வைக்கப்பட்டுள்ளது. உயில் எழுதி வைத்தவர் வயதானவர் என்பதால் கைரேகை

வைக்கப்பட்டுள்ளது. உயில் மற்றும் உயில் இணைப்பு ஆவணங்களை மறுத்ததால் உயிலை மெய்ப்பிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு பிறகு T.O.S.No.312/2021 வழக்காக மாற்றம் செய்யப்பட்டது. அ.வ.எண்.50/2012 மற்றும் அ.வ.எண்.1019/2009 ஆகிய வழக்குகள் நிலுவையில் உள்ளது. 10.08.2006 தேதியில் சொத்துக்களைப் பொறுத்து புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டது. அசல் வழக்கில் உயிலை நிரூபிக்க வேண்டியது அவசியமாகின்றது. ஆணையுறுதி ஆவணத்தில் பத்திகள் 7 முதல் 12–ல் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவைகள் ஆகும். முதல் எதிர் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்வதற்கு தடை எதுவும் இல்லை. உயில் சாசனம் மற்றும் உயில் இணைப்பு பத்திரம் ஆகிய ஆவணங்களை மனுதாரர் மறுத்ததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரையை நிராகரிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நிலைக்கத்தக்கது அல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் வாய் மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. <u>தீர்வு:–</u>

மனுதாரர் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11– ன் கீழ் வழக்குரையை நிராகரிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் முதல் எதிர்மனுதாரர் 16.07.2014 தேதியிட்ட உயில் சாசனத்தையும், 11.11.2018 தேதியிட்ட உயில் இணைப்பு பத்திரத்தையும் உறுதி படுத்த கோரி மனு தாக்கல் செய்துள்ளார்

என்றும், உயில் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் சென்னை மாவட்டத்திற்கு வெளியே அமைந்துள்ளது என்றும், 16.07.2014 தேதியிட்ட உயில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், உயில் இணைப்பு பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றும், 16.07.2014 தேதிய உயிலில் ஆர்.பி.சாரதி என்பவர் கையெழுத்து போட்டுள்ளார் என்றும், 14.07.2018 தேதிய உயில் இணைப்பு பத்திரத்தில் கையெழுத்துடன் இடது பெருவிரல் கைரேகை வைக்கப்பட்டுள்ளது என்றும், இந்திய வாரிசுரிமை சட்டம் 1925, பிரிவு 57 உடன் இணைந்த பிரிவு 213 –ன்படி உயில் சாசனம் மற்றும் உயில் இணைப்பிற்கு உயில் மெய்ப்பிதழ் சான்றிதழ் பெற வேண்டியது இல்லை என்றும், 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து பல நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன என்றும், அ.வ.எண்.50/2012 மற்றும் அ.வ.எண்.1019/2009 ஆகிய வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும், அந்த வழக்குகளில் வாதியின் தாயார் தரப்பினராக உள்ளார் என்றும், ஸ்ரீ நரசூஸ் காபி கம்பெனி லிமிட்டெட் நிறுவனம் சம்பந்தமாக அ.வ.எண்.106/2009 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மனுதாரருக்கு சாதகமாக முடிந்துள்ளது என்றும், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் சி.ஆர்.பி.நெ.2379/2012–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் எஸ்.எல்.பி.நெ. 118/2015–ல் அந்த உத்தரவு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், மனு தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், மனுவில் வழக்குமூலம் பற்றி கற்பனையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், உயில் சாசனம் மற்றும் உயில் இணைப்பு பத்திரம் எழுதுவதற்கு சாரதி என்பவருக்கு உரிமை இல்லை என்றும், வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், எனவே வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என்றும் கூறினார்.

8. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் பற்றி அசல் வழக்கின் விசாரணையின் போது தான் தீர்மானிக்க முடியும் என்றும், 16.07.2014 தேதியிட்ட உயில் சாசனம் மற்றும் 14.11.2018 தேதிய உயில் இணைப்பு பத்திரம் ஆகியவைகளை T.O.S.No.312/2021 வழக்கு விசாரணையின்போது தான் நிரூபிக்க முடியும் என்றும், மனுதாரர் தரப்பில் கூறப்பட்டவைகள் பொருண்மை சார்ந்த சங்கதிகள் என்றும், அவைகளை இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளித்த பிறகு அசல் வழக்கில் தான் தீர்மானிக்க முடியும் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

9. இரு தரப்பு வாதுரைகளையும், T.O.S.No.312/2021 வழக்கின் வழக்குரை மற்றும் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்தது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 7 விதி 11ன்படி வழக்குரை மற்றும் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை மட்டுமே கண்ணுற்று பரிசீலித்து ஒரு வழக்குரை நிராகரிக்கத்தக்கதா? என்பதை முடிவு செய்ய வேண்டும். அந்நேர்வில் பிரதிவாதிகள் தரப்பின் எதிர்வாதத்தையோ அல்லது பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படும் ஆவணங்களையோ நீதிமன்றம் கவனத்தில் கொள்ளக் கூடாது என்பது நிலைபெற்ற சட்ட விதி ஆகும்.

10. முதல் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் Probate Original Petition. No.258/2019 என்ற மனுவை 16.07.2014 தேதியிட்ட உயில் சாசனம் மற்றும் 14.11.2018 தேதியிட்ட உயில் இணைப்பு பத்திரம் ஆகிய ஆவணங்களை உறுதிசெய்யக் கோரியும், உயில்

மெய்ப்பிதழ் மற்றும் நிர்வாக கடிதம் வழங்க உத்தரவிடக் கோரியும் இந்திய வாரிசுரிமைச்சட்டம் 1925, பிரிவுகள் 232, 235 மற்றும் 276– ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவானது T.O.S No.312/2021 ஆக மாற்றப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

11. 16.07.2014 தேதியிட்ட உயில் சாசனம் உண்மையானதா? மற்றும் செல்லத்தக்கதா? என்பதையும், 14.11.2018 தேதியிட்ட உயில் இணைப்பு ஆவணம் உண்மையானதா? மற்றும் செல்லத்தக்கதா? என்பதையும் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளித்த பிறகு அசல் வழக்கில் (T.O.S.No.312/2021) தான் தீர்மானிக்க இயலும். வழக்கில் உயில் சாசனம் மற்றும் உயில் இணைப்பு பத்திரம் ஆகிய ஆவணங்களை உண்மையானது என உறுதி செய்யவும், உயில் மெய்ப்பிதழ் மற்றும் நிர்வாக கடிதம் வழங்கவும் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அவசியமானதாகும். மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் பற்றி அசல் வழக்கின் விசாரணையின் போது தான் தீர்மானிக்க இயலும். மனுதாரர் தரப்பில் கூறப்பட்டவைகள் பொருண்மை சார்ந்த சங்கதிகள் ஆகும். அவைகளை இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளித்த பிறகு அசல் வழக்கில் தான் தீர்மானிக்க முடியும். வழக்குரை மற்றும் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை முழுவதும் படித்து பொருள் கொள்ளும் பொழுது T.O.S.No.312/2021 என்ற வழக்கானது வழக்கு மூலத்தை கொண்டு இருக்கிறது என்பது தெளிவாகின்றது. ஆர்.பி.சாரதி என்பவருக்கு உயிலில் கண்ட சொத்துக்களை பொறுத்து உயில் சாசனம் எழுதுவதற்கு உரிமை உள்ளதா? என்பது குறித்து அசல் வழக்கில் தான் தீர்வு காண இயலும். மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட சங்கதிகள் அனைத்தும் பொருண்மைகள் சார்ந்த சங்கதிகள்

ஆகும். மேலும் இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட முன் தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை கவனத்தில் கொண்டது.

**2020 (1) CTC 275**
**Loom Tex Exports, Chennai & Others Versus Thanneer Panthal Dharma Chathiram, Rep. by its Fit Person, Karur**
**Para. 18** – It is clear from the above Judgment that it is enough if the Plaint averments and the documents relied upon discloses some cause of action and it is not necessary that such averments and documents are sufficient enough to prove the facts stated therein, for the purpose of obtaining the relief claimed in the Suit. So long as the claim, discloses some cause of action or raise some questions fit to be decided by a Judge, that is enough to proceed further with the Suit and a Plaint cannot be rejected on the ground that it does not disclose the cause of action.

**CDJ 2020 SC 557 = AIR 2020 (SC) 2721**
**Shakti Bhog Food Industries Ltd. Versus The Central Bank of India & Another**
**Para. 13.** It is well established position that the cause of action for filing a suit would consist of bundle of facts. Further, the factum of suit being barred by limitation, ordinarily, would be a mixed question of fact and law. Even for that reason, invoking Order VII Rule 11 of the CPC is ruled out. In the present case, the assertion in the plaint is that the appellant verily believed that its claim was being processed by the Regional Office and the Regional Office would be taking appropriate decision at the earliest. That belief was shaken after receipt of letter from the Senior Manager of the Bank, dated 8.5.2002 followed by another letter dated 19.9.2002 to the effect that the action taken by the Bank was in accordance with the rules and the appellant need not correspond with the Bank in that regard any further. This firm response from the respondent-Bank could trigger the right of the appellant to sue the respondent-Bank. Moreover, the fact that the appellant had eventually sent a legal notice on 28.11.2003 and again on 7.1.2005 and then filed the suit on 23.2.2005, is also invoked as giving rise to cause of action. Whether this plea taken by the appellant is genuine and legitimate, would be a mixed question of fact and law, depending on the response of the respondents.

மேற்கண்ட முன் தீர்ப்புரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக உள்ளது. 16.07.2014 தேதியிட்ட உயில் சாசனம் மற்றும் 14.11.2018 தேதிய உயில் இணைப்பு பத்திரம் ஆகியவைகளை சட்டப்படி நிரூபிக்க முதல் எதிர்மனுதாரருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகின்றது. வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபிக்க முதல் எதிர்மனுதாரருக்கு

வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகின்றது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதுரை ஏற்கும்படியாக இல்லை. முதல் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதுரை ஏற்கும்படியாக உள்ளது. மேற்கண்ட பரிசீலனைகளின்படி இந்த மனு அனுமதிக்கத்தக்கது அல்ல என பிரச்சனையின் மீது தீர்வு காணப்படுகிறது.

12. முடிவில், மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/−என்.ராமகிருஷ்ணன்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.

(ஒம்/−என்.ராமகிருஷ்ணன்)
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.